**ஜூன் – 28**

# TNPSC துளிகள்

- 2026 ஆம் ஆண்டிற்கான அம்புபாச்சி மேளா அசாமில் உள்ள காமாக்யா கோவிலில் நடைபெறுவதுடன் இது மா காமாக்யாவின் ஆன்மீக ஓய்வு மற்றும் மிதுன ராசியிலிருந்து கடக ராசிக்கு சூரியன் மாறுவது போன்ற ஜோதிட முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பருவமழைக் கால திருவிழா ஆகும்.
- வடகிழக்கு இந்தியாவின் மிகப்பெரிய இயற்கை நறுமணப் பொருட்கள் பதப்படுத்தும் ஆலையானது மேகாலயாவின் ரி-போய் மாவட்டத்தில் உள்ள போயிரிம்போங்கில் திறக்கப்பட்டது.
- தமிழ்நாடு காவல் துறையின் இரண்டாம் நிலை காவலர் ஜே.கௌதமி, ஜப்பானின் நகோயாவில் நடைபெறவுள்ள 2026 ஆம் ஆண்டிற்கான ஆசிய விளையாட்டுப் போட்டியில் பெண்களுக்கான 800 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் பங்கேற்க தகுதி பெற்று உள்ளார்.
    - ஒடிசாவின் புவனேஸ்வரில் நடைபெற்ற 65-வது தேசிய மாநிலங்களுக்கு இடையேயான மூத்தோர் தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் பெண்களுக்கான 800 மீட்டர் ஓட்டத்தில் இவர் தங்கப் பதக்கம் வென்றார்.
- மேகாலயா மாநில உயிரியல் பூங்காவில் 2026 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் குட்டை வால் குரங்கு (மகாக்கா ஆர்க்டாய்டீஸ்) முதல்முறையாக வெற்றிகரமாக ஈனப் பட்டு உள்ளது.
    - தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் காணப்படும் ஒரு வகை முதன்மைக் குரங்கு இனமான குட்டை வால் குரங்கானது IUCN செந்நிறப் பட்டியலில் எளிதில் பாதிக்கப்படக் கூடிய இனமாகப் பட்டியலிடப்பட்டுள்ளது.
- பொருளாதார வளர்ச்சி மற்றும் நிலையான மேம்பாட்டிற்கு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் (MSME) பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 27 அன்று சர்வதேச MSME தினம் அனுசரிக்கப்படுகிறது.
    - 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு Empowering MSMEs through Innovation and Sustainable Industrial Development என்பதாகும்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## முதலமைச்சரின் காவல்துறைப் பதக்க விருதுகள் 2026


- 2023 ஆம் ஆண்டு முதல் மாநிலத்தில் போதைப்பொருள் உற்பத்தியை ஒழிப்பது மற்றும் சட்டவிரோத போதைப்பொருள் கடத்தலைத் தடுப்பது ஆகியவற்றில் சிறப்பான பணியாற்றியதற்காக முதலமைச்சரின் காவல்துறைப் பதக்க விருதுகளை தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.
- சுதந்திர தின விழாவில் (2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15) முதலமைச்சரால் இப்பதக்கங்கள் வழங்கப்பட உள்ளன.
- காவல்துறைக் கண்காணிப்பாளர் (SP) அந்தஸ்து முதல் தலைமைக் காவலர் மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் வரையிலான மொத்தம் 15 காவல் துறையினர் இவ்விருதுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.
- விருது பெறுபவர்களில் விவேகானந்த சுக்லா (காவல்துறைக் கண்காணிப்பாளர், கடலூர்), ஜி.சந்தீஷ் (காவல்துறைக் கண்காணிப்பாளர், ராமநாதபுரம்),

எஸ்.லட்சுமணன் (கூடுதல் காவல்துறைக் கண்காணிப்பாளர், போதைப்பொருள் நுண்ணறிவுப் பிரிவு - குற்றப்புலனாய்வுத் துறை (NIB-CID)), வி.மனோஜ்குமார் (காவல்துறை உதவி ஆணையர், போதைப்பொருள் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவு (ANIU)) மற்றும் எம்.கண்ணன் (காவல்துறை ஆய்வாளர்) ஆகியோர் அடங்குவர்.

❖ போதைப்பொருள் குற்றங்களைக் கண்டறிதல், போதைப் பொருட்களைப் பறிமுதல் செய்தல் மற்றும் சட்டவிரோத போதைப்பொருள் கடத்தல் வலைப்பின்னல்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றில் சிறப்பாக பணியாற்றியதை இவ்விருதுகள் அங்கீகரிக்கின்றன.



## சென்னை உயர் நீதிமன்றத்தில் தேர்தல் மனுக்களின் எண்ணிக்கை அதிகரிப்பு




❖ சமீபத்திய ஆண்டுகளில் இல்லாத அளவாக, 2026 ஆம் ஆண்டு தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி சட்டமன்றத் தேர்தல் முடிவுகளை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் சுமார் 55 தேர்தல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

❖ இந்த மனுக்கள் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1951 மற்றும் சென்னை உயர் நீதிமன்ற (தேர்தல் மனுக்கள்) விதிகள், 1967 ஆகியவற்றின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

❖ முதலமைச்சர் சி.ஜோசப் விஜய், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் சில அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் (எம்.எல்.ஏக்கள்) உள்ளிட்ட பல தலைவர்களின் தேர்தலை எதிர்த்து இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

- தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து 45 நாட்களுக்குள், சம்பந்தப்பட்ட தொகுதியைச் சேர்ந்த ஒரு வேட்பாளர் அல்லது வாக்காளர் தேர்தல் மனுக்களைத் தாக்கல் செய்ய வேண்டும்.
- இந்த மனுக்களின் எண்ணிக்கை 12 (2011), 23 (2016), 13 (2021) என இருந்த நிலையில், தற்போது சுமார் 55 (2026) ஆக அதிகரித்துள்ளதுடன் சென்னை உயர் நீதிமன்றத் தேர்தல் அமர்வு உருவாக்கப்பட்டதற்குப் பிறகு இதுவே மிக அதிக எண்ணிக்கையாகும்.

## போதைப்பொருளுக்கு எதிரான ஓட்டம் 2026




- சர்வதேசப் போதைப்பொருள் பயன்பாடு மற்றும் சட்டவிரோதக் கடத்தலுக்கு எதிரான தினத்தை முன்னிட்டு, 2026 ஆம் ஆண்டு ஜூன் 26 அன்று சென்னையில் நடைபெற்ற 'போதைப்பொருளுக்கு எதிரான ஓட்டம் 2026' நிகழ்வை தமிழ்நாடு முதலமைச்சர் கொடியசைத்துத் தொடங்கி வைத்து, அதில் பங்கேற்றார்.
- ஆரோக்கியமான வாழ்க்கை முறையை மேம்படுத்தவும், போதைப்பொருள் பழக்கத்திற்கு எதிராக விழிப்புணர்வை ஏற்படுத்தவும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் (SDAT) இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.
- பங்கேற்பாளர்களுடன் இணைந்து ஓடிய முதலமைச்சர், "விளையாட்டைத் தேர்ந்தெடு, போதைப் பொருட்களை விட்டு விடு" என்ற செய்தியுடன் கூடிய போதைப்பொருள் ஒழிப்பு உறுதிமொழியில் கையெழுத்திட்டார்.
- சரத் கமல், ஜோஷ்னா சின்னப்பா, வி.பாஸ்கரன், மற்றும் அனிதா பால்துரை உள்ளிட்ட பல முன்னணி விளையாட்டு வீரர்களும் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

# தேசியச் செய்திகள்

## இணையவழி மோசடிக்கான e-Zero முதல் தகவல் அறிக்கை

- 52-வது PRAGATI கூட்டத்தின் போது, இணையவழி நிதி மோசடி வழக்குகளுக்கு e-Zero முதல் தகவல் அறிக்கை (FIR) முறையைச் செயல்படுத்துமாறு அனைத்து மாநிலங்களுக்கும் இந்தியப் பிரதமர் உத்தரவிட்டுள்ளார்.
- e-Zero முதல் தகவல் அறிக்கை என்பது சரிபார்க்கப்பட்ட இணையவழி நிதி மோசடி

புகார்களை Zero FIRs ஆக மாற்றும் ஒரு டிஜிட்டல் அமைப்பாகும் என்ற நிலையில் இதன் மூலம், சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு வழக்கை மாற்றுவதற்கு முன்பாக, எந்த ஒரு காவல் நிலையத்திலும் வழக்குப் பதிவு செய்ய முடியும்.

- ❖ தேசிய இணையவழிக் குற்றத்திற்கான புகாரளிக்கும் தளம் (NCRP) அல்லது 1930 என்ற இணையவழிக் குற்றத் தடுப்பிற்கான உதவி எண் மூலம் புகாரளிக்கப்படும் ₹10 லட்சத்திற்கும் அதிகமான இணையவழி நிதி மோசடிப் புகார்களை இந்த அமைப்பு உள்ளடக்குகிறது.
- ❖ இணையவழிக் குற்ற வழக்குகளை விரைவாகப் பதிவு செய்வதற்கும் விசாரிப்பதற்கும் ஏதுவாக, மத்திய உள்துறை அமைச்சகத்தின் (MHA) கீழ் இயங்கும் இந்திய இணைய வழிக் குற்றத் தடுப்பு ஒருங்கிணைப்பு மையத்துடன் (I4C) இது ஒருங்கிணைக்கப் பட்டுள்ளது.
- ❖ இணையவழி மோசடியில் இழந்த பணத்தை மீட்பதற்கான வாய்ப்புகளை மேம்படுத்த Golden Hour எனப்படும் முக்கிய நேரத்தில் விரைவான நடவடிக்கையை உறுதி செய்வதை இந்த முன்னெடுப்பு நோக்கமாகக் கொண்டுள்ளது.




## சர்வதேசச் செய்திகள்

### 16-வது பிரிக்ஸ் தேசிய பாதுகாப்பு ஆலோசகர்கள் கூட்டம்

- ❖ 2026 ஆம் ஆண்டிற்கான பிரிக்ஸ் (BRICS) அமைப்பின் தலைவர் என்ற முறையில், 16-வது பிரிக்ஸ் தேசிய பாதுகாப்பு ஆலோசகர்கள் (NSA) கூட்டத்தை புதுடெல்லியில் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் (NSA) அஜித் தோவல் தலைமையில் இந்தியா தொகுத்து வழங்கியது.
- ❖ இந்தக் கூட்டமானது, இணையவழிப் பாதுகாப்பு, பயங்கரவாதம், செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் தொழில்நுட்ப நிர்வாகம் உள்ளிட்ட "இன்றைய உலகம் எதிர்கொள்ளும் மரபுசாரா பாதுகாப்பு சவால்கள்" என்பதன் மீது கவனம் செலுத்தியது.
- ❖ இந்தியாவின் 2026 ஆம் ஆண்டு பிரிக்ஸ் தலைமையகத்தின் கருத்துருவானது Building

for Resilience, Innovation, Cooperation and Sustainability என்பதாகும்.

- பிரிக்ஸ் அமைப்பின் தலைமைப் பதவியானது உறுப்பினர் நாடுகளிடையே ஆண்டு தோறும் சுழற்சி முறையில் வருகிறது. 2012, 2016 மற்றும் 2021 ஆகிய ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியா நான்காவது முறையாக இத்தலைமைப் பதவியை ஏற்றுள்ளது.
- தேசிய பாதுகாப்பு ஆலோசகர்களின் (NSA) கூட்டமானது, 2026-ஆம் ஆண்டின் பிற் பகுதியில் இந்தியாவில் நடைபெறவுள்ள பிரிக்ஸ் தலைவர்கள் உச்சி மாநாட்டிற்கான ஒரு முக்கிய ஆயத்தக் கூட்டமாகும்.




## அவசரநிலைப் பிரகடனம் – பொலிவியா




- 50 நாட்களாக நடைபெற்று வந்த போராட்டங்கள் மற்றும் நெடுஞ்சாலை மறியல் நெருக்கடியை முடிவுக்குக் கொண்டுவர, அதிபர் ரோட்ரிகோ பாஸ் அறிவித்த நாடு தழுவிய அவசரநிலைக்கு பொலிவியாவின் நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.
- நாடு முழுவதும் உள்ள முக்கிய நெடுஞ்சாலைகள் மறிக்கப்பட்டதால் உணவு, எரிபொருள் மற்றும் மருந்துப் பொருட்களின் விநியோகத்தை இப்போராட்டங்கள் முடக்கின.
- அந்நியச் செலாவணி (அமெரிக்க டாலர்) தட்டுப்பாட்டுக்கு மத்தியில் நிதிப் பற்றாக் குறையைக் கட்டுப்படுத்த, நீண்டகாலமாக வழங்கப்பட்டு வந்த எரிபொருள்

மானியங்களை அரசாங்கம் குறைத்ததை அடுத்து இந்த அமைதியின்மை தொடங்கியது.

- அவசரநிலை அறிவிக்கப்பட்ட பிறகு, பல போராட்டக் குழுக்கள் சாலை மறியல்களை விலக்கிக் கொள்ள ஒப்புக் கொண்டன என்பதோடு, போராட்டங்கள் தொடர்பான எவ்வித மறியல்களும் தற்போது இல்லை என அந்நாட்டின் தேசிய நெடுஞ்சாலை ஆணையம் தெரிவித்துள்ளது.
- நிலைமையைச் சீராக்க அரசாங்கம் தொடர்ந்து காவல்துறை மற்றும் ராணுவப் படைகளைக் குவித்து வரும் அதே வேளையில், போராட்டக்காரர்களின் கோரிக்கைகளைத் தீர்ப்பதற்கான பேச்சுவார்த்தைகளும் தொடர்கின்றன.

# பொருளாதாரச் செய்திகள்

## முன்னோடி வங்கித் திட்ட வழிகாட்டுதல்கள் 2026




- இந்திய ரிசர்வ் வங்கி (RBI) ஆனது தனது முந்தைய அறிவுறுத்தல்களை மாற்றி, 2026 ஜூன் 19 அன்று அதிகாரப்பூர்வ சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்ட முன்னோடி வங்கித் திட்ட வழிகாட்டுதல்களை வெளியிட்டது.
- முன்னோடி வங்கித் திட்டம் என்பது இந்தியாவில் கடன் திட்டமிடல் மற்றும் நிதி உள்ளடக்கத்திற்கான மாவட்ட அளவிலான வங்கி ஒருங்கிணைப்பு அமைப்பாகும்.
- ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு முன்னோடி வங்கி ஒதுக்கப்படும் என்பதுடன் புதிய திருத்தப்பட்டக் கட்டமைப்பானது, பணியாளர்கள் மற்றும் உள்கட்டமைப்பு ஆதரவுடன் கூடிய பிரத்தியேக மாவட்ட முன்னோடி மேலாளர் இருப்பதை கட்டாயமாக்குகிறது.
- இந்த அமைப்பானது, வட்டார அளவிலான வங்கியாளர்கள் குழு (BLBC), மாவட்ட ஆலோசனைக் குழு (DCC) மற்றும் மாநில அளவிலான வங்கியாளர்கள் குழு (SLBC) ஆகிய மூன்று அடுக்குக் கட்டமைப்பின் மூலம் செயல்படுகிறது.
- கிராமப்புற மற்றும் பகுதி நகர்ப்புற கிளைகளுக்கான 60% கடன்-வைப்பு (CD) விகித

அளவுகோலைத் தக்க வைத்துள்ள RBI, விவசாயம் மற்றும் குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் (MSME) மீதான தனது கவனத்தையும் வலுப்படுத்தியுள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## ஆர்க்டிக் அடிவானத்திற்கு அப்பால் பார்க்கக் கூடிய ரேடார் அமைப்பு




- ஆர்க்டிக் அடிவானத்திற்கு அப்பால் பார்க்கக் கூடிய ரேடார் அமைப்பு (A-OTHR) எனும் அமைப்பைக் கொள்முதல் செய்வதற்காக ஆஸ்திரேலியா மற்றும் BAE சிஸ்டம்ஸ் ஆஸ்திரேலியா ஆகியவற்றுடன் 2.5 பில்லியன் டாலர் மதிப்பிலான ஒப்பந்தத்தில் கனடா கையெழுத்திட்டது.
- A-OTHR அமைப்பானது, சாதாரண ரேடார் வரம்பிற்கு அப்பால் உள்ள விமானங்கள் மற்றும் எறிகணைகளைக் கண்டறிய, அயனிமண்டலத்திலிருந்து பிரதிபலிக்கும் உயர் அதிர்வெண் ரேடியோ அலைகளைப் பயன்படுத்துகிறது.
- இந்த அமைப்பானது ஆஸ்திரேலியாவின் ஜிண்டாலீ செயல்பாட்டு ரேடார் வலையமைப்பு (JORN) தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டதுடன் மேலும் இது கனடாவின் வட அமெரிக்க விண்வெளிப் பாதுகாப்புத் தலைமையக (NORAD) நவீனமயமாக்கல் திட்டத்தை ஆதரிக்கிறது.
- நோராட் (NORAD - வட அமெரிக்க விண்வெளிப் பாதுகாப்புத் தலைமையகம்) என்பது கனடா மற்றும் அமெரிக்காவின் கூட்டுப் பாதுகாப்பு அமைப்பாகும்.
- இத்திட்டம் 2029 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் தனது ஆரம்பகட்ட செயல்பாட்டுத் திறனை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது என்பதோடு மேலும் இது 2026-2033 ஆம் ஆண்டு கால கட்டத்தில் கனடாவில் ஆண்டுதோறும் சுமார் 2,270 வேலைவாய்ப்புகளை உருவாக்கும்.


# சுற்றுச்சூழல் செய்திகள்

## நீல நீச்சல் நண்டு வளர்ப்புத் தொழில்நுட்பம்

- சென்னையில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி சபை - மத்திய உவர்நீர் மீன் வளர்ப்பு நிறுவனம் (ICAR-CIBA) ஆகியன அமைப்புகள் இணைந்து இந்தியாவின் முதல் நீல நீச்சல் நண்டு வளர்ப்புத் தொழில்நுட்பத்தை வெற்றிகரமாக செயல்விளக்கம்

செய்து காட்டியது.

- நீல நீச்சல் நண்டானது அறிவியல் பூர்வமாக 'போர்டுனஸ் ரெட்டிகுலட்டஸ்' என அழைக்கப் படுவதுடன் இது உவர்நீர் மீன்வளர்ப்பில் பயன்படுத்தப்படும் ஒரு முக்கியமான வணிக ரீதியான கடல் நண்டு இனமாகும்.
- ICAR-CIBA நிறுவனமானது, இளம் நண்டு பொரிப்பகம், நாற்றங்கால் வளர்ப்பு, வளர்ப்பகப் பண்ணை நடைமுறைகள் மற்றும் சிறப்பாக உருவாக்கப்பட்ட BSCrabPlus எனப்படும் குருணைத் தீவனம் உள்ளிட்ட முழுமையான தொழில்நுட்பத் தொகுப்பை உருவாக்கியுள்ளது.
- இந்த செயல்விளக்கமானது, இந்நிறுவனத்தால் உற்பத்தி செய்யப்பட்ட பொரிப்பக இளம் நண்டுகள் மற்றும் BSCrabPlus தீவனத்தைப் பயன்படுத்தி, சென்னையில் உள்ள முட்டுக்காடு பரிசோதனை நிலையத்தில் நடத்தப்பட்டது.
- வணிக ரீதியான நண்டு வளர்ப்பை மேம்படுத்துதல், விவசாயிகளின் வருமானத்தை அதிகரித்தல் மற்றும் இந்தியாவில் நிலையான உவர்நீர் மீன்வளர்ப்பை ஆதரித்தல் ஆகியவற்றை இத்தொழில்நுட்பம் நோக்கமாகக் கொண்டுள்ளது.





# மாநிலச் செய்திகள்

## மும்மொழிக் கொள்கை விவகாரம் - நாகாலாந்து

- தேசிய கல்விக் கொள்கை (NEP) 2020-இன் கீழ் மும்மொழிக் கொள்கையை நடைமுறைப் படுத்துவதற்கான CBSE வாரியத்தின் கட்டாய உத்தரவுக்கு நாகாலாந்தில் உள்ள அரசு உதவிபெறாத மத்திய இடைநிலைக் கல்வி வாரியப் (CBSE) பள்ளிகள் சங்கம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.
- நாகாலாந்தில் 17 முக்கிய பழங்குடியின மொழிகள் உள்ளன. அங்கு பொதுவான பிராந்திய மொழி என்று ஒன்றுமில்லை. அதே சமயம் ஆங்கிலம் அதிகாரப்பூர்வ மொழியாகவும் பயிற்று மொழியாகவும் உள்ளது.
- பல மொழிகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், பாடப்புத்தகங்கள் மற்றும் நிலையான பாடத்திட்டம் ஆகியவற்றின் பற்றாக்குறையை இம்மாநிலம் எதிர்கொள்கிறது.
- மும்மொழிக் கொள்கையானது கோத்தாரி குழுவால் (1964-66) முதன்முதலில்

பரிந்துரைக்கப் பட்டு, தேசிய கல்விக் கொள்கையில் (1968) ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- தேசிய கல்விக் கொள்கை (NEP) 2020-இன் கீழ் மாணவர்களுக்கு மூன்று மொழிகளை நெகிழ்வுத் தன்மையுடன் படிக்க அனுமதிக்கிறது, ஆனால் 10 ஆம் வகுப்பு வரை குறைந்தது இரண்டு இந்திய மொழிகளையாவது படிக்க வேண்டும் என்று CBSE கட்டாயப் படுத்துகிறது.
- மக்கள்தொகைக் கணக்கெடுப்பு மற்றும் ஹெர்ஃபிண்டால்-ஹிர்ஷ்மன் குறியீடு போன்ற கணித அளவீடுகளின்படி, நாகாலாந்து மிகவும் மொழிப் பன்முகத்தன்மை கொண்ட மாநிலமாகத் திகழ்கிறது.
- இங்கு குறைந்தது 14 அங்கீகரிக்கப்பட்ட மொழிகளும், அதன் முக்கியப் பழங்குடியினரால் பேசப்படும் 17 வட்டார மொழிகளும் உள்ளன.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★